**IN THE COURT OF THE DISTRICT MUNSIF,**
**Present: Miss.D.V.Koperundevi, B.Com., LLB., (Hons),**
**District Munsif, Arni.**
**O.S. 228/2012**

2026—ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 4ம் நாள் புதன்கிழமை வாதி தரப்பு சாட்சியின் சாட்சியம். உறுதிமொழிச்சட்டம் 1969, பிரிவு 3—ன் படி என்னால் ஆணையிடப்பட்டு, சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரணை செய்யப்படுகிறது.

**Deposition of Witness for** **PW 2**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | வாசுதேவன் | தொழில் | : | வழக்கறிஞர் |
| தந்தை பெயர் | : | பெருமாள் | வயது | : | 43 |
| கிராமம் | : | மேட்டுகுடிசை | | : | |
| தாலுக்கா | : | வந்தவாசி | | : | |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 04.02.2026. நேரம் - 1.50**

சாட்சியின் அடையாளம் - பணி அடையாள அட்டையின் மூலம் அடையாளம் காணப்பட்டது.

**முதல் விசாரணை**

நான் இவ்வழக்கில் வழக்கறிஞர் ஆணையர் ஆவேன். நான் இவ்வழக்கு சம்மந்தமாக 21.02.2023 தேதியில் இரு தரப்பு வழக்கறிஞர்களுக்கும் அறிவிப்பு கொடுத்து, 18.03.2023 அன்று காலை 10.00 மணியளவில் நான் தாவா சொத்தை பார்வையிட்டேன். நான் 21.02.2023 அன்று அறிவிப்பு கொடுத்ததற்கு முன்பு தாவா இடத்தை பார்வையிட்டேன். நான் பார்வையிட்டு தாக்கல் செய்த அறிக்கை மற்றும் வரைபடம் ஏற்கனவே வா.சா.1 மூலம் C1 to C8 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. தாவா இடத்தை பார்வையிட முடியவில்லை, ஏனென்றால் தாவா இடத்திற்கான ஆவணங்கள (Old FMB) கிடைக்கவில்லை. வழக்கு சொத்திற்கான Old FMB நில அளவையர் கொண்டு வராத காரணத்தால் தாவா இடத்தை பார்வையிட முடியவில்லை.

2. 18.03.2023 அன்று வாதி மற்றும் பிரதிவாதி இரு தரப்பு சொத்துக்களையும், நில அளவையர் உதவியுடன் அளந்து பார்த்தேன். வாதி, பிரதிவாதி சொத்துக்களை அளவீடு செய்ய நான் கிராமத்தில் இருந்து பஜனை கோயில் வழியாக சென்றேன். மேற்படி வழியின் அளவுகளை நான் என்னுடைய அறிக்கையில் குறிப்பிட்டு சொல்லவில்லை. பஜனை கோயில் அடுத்து ஒரு ஓடைக் கால்வாய் உள்ளது. அந்த வழியாகதான் வாதி, பிரதிவாதி நிலத்தை நான் பார்வையிட்டு அளவீடு செய்தேன். வாதி நிலத்திற்கு செல்ல பஜனை கோயில் பக்கம் வழி உண்டு, வேறு வழி உள்ளதா என்று எனக்கு தெரியவில்லை.

3. 1 மற்றும் 2ம் பிரதிவாதிகளின் நிலத்தின் வழியாக சென்றுதான் வாதியின் நிலத்தை பார்வையிட்டேன். பிரதிவாதிகளின் நிலத்தின் வழியை தவிர்த்து வாதி நிலத்திற்கு செல்ல வேறு வழி ஏதும் இல்லை. மேற்படி வழி குறித்து புதிய புல வரைபடம் மற்றும் பழைய வரைபடத்தில் குறிப்பு கண்டுள்ளது, ஆனால் பெரிய பாதையாக இல்லை, வரப்பாக உள்ளது. புல வரைபடத்தில் வழி உள்ளது, ஆனால் நான் பார்வையிடும் போது வரப்பாகதான் இருந்தது. அந்த வரப்பானது தொடர்ச்சியாக நிலம் வரையும், இடையில் சில இடங்களில் ஒரு அடி, 2 அடி குறுகி இருந்தது.

4. என்னுடைய அறிக்கையில் 3ம் பத்தியில் 3வது வரியில் சர்வே எண் 153/4 சம்மந்தப்பட்ட 'ஆ' அட்டவணை சொத்தில் சில இடங்களில் மேற்படி வரப்புகள் அழிக்கப்பட்டு 1ம் எதிர்மனுதாரரின் நிலத்தோடு சேர்ந்தவாரும் அமைந்துள்ளது என குறிப்பிட்டு என் அறிக்கையில் சொல்லியுள்ளேன். வழி சம்மந்தமாக நான் அங்குள்ள அக்கம் பக்கத்தினரிடம் விசாரிக்கவில்லை. பிரதிவாதிகள் நிலத்திற்கு தென்னன்டை பக்கத்தில் நில உரிமையாளர்கள் யாரும் இல்லை. பிரதிவாதிகள் நிலத்தில் குறிப்பிட்டுள்ள வழியை தவிர்த்து வாதிகள் நிலத்திற்கு செல்ல வேறு வழி இல்லை என்று நில அளவையர் விசாரித்துதான் நான் அறிக்கையை தாக்கல் செய்தேன்.

5. என்னுடைய அறிக்கையில் வாதிகளின் தாவா அ அட்டவணை சொத்தை சுற்றி மற்ற நபர்களின் நிலங்கள் அமைந்திருப்பதாகவும், கிழக்கில் மொரப்பந்தாங்கல் ஏரி அமைந்துள்ளதாக குறிப்பிட்டுள்ளேன்.

**முதல் விசாரணை முடிவடைந்தது.**

**பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுக்கோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.**

**நேரம் - 2.20**

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the Plaintiffs / Defendants and admitted by the witness to be correct.

Sd/- D.V.Koperundevi
District Munsif,
Arni